பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 மார்சழி 2 ஸபர் 8 இதழ் 308
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17 - 12-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-12-17
PERIODICALS DIVISION
LIBRARY

## பத்திரிகையாளருக்கு இலவச பிரயாண வசதி
### பாராளுமன்றத்தில் 'சிவா' கோரிக்கை

(கொழும்பு)

"பத்திரிகையாளர்களுக்கு இலவச பிரயாண வசதிகளை வழங்க அரசு முன்வரவேண்டும்" என்று நல்லூர் எம். பி திரு. எம். சிவசிதம்பரம் போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று போக்குவரத்து அமைச்சின் நிதிஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் திரு எம் சிவசிதம்பரம் பேசுகையில்; "இலங்கையில் பத்திரிகையாளர்கள் மிகவும் வசதி குறைந்தவர்கள். பலரது நிலை பரிதாபத்துக்குரியது. இவர்களுக்கு இலவச பிரயாண வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் விளம்பரத்தை விரும்புகின்றோம். ஆகையினால் அவர்களது நிலை நிச்சயம் கவனிக்கப்படவேண்டும்" என்றார்.

(ம)

# தமிழ்பேசும் மக்களுக்கு "வேலைவழங்க மறுப்பு!"
## புள்ளி விபரத்துடன் 'அமிர்' புகார்

(கொழும்பு)

"ரயில்வே திணைக்களத்தில் புதிதாக வேலைவாய்ப்புகள் வழங்கும் போது தமிழ்ப்பேசும் மக்கள் முழுக்க முழுக்க புறக்கணிக்கப் படுகின்றார்கள். இந்தப்பாகுபாட்டை நிறுத்த போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் பேசுகையில் குற்றம் சுமத்தினர்.

திரு. அமிர்தலிங்கம் தாம் சுமத்திய குற்றச்சாட்டை புள்ளிவிபரங்களுடன் எடுத்து விளக்கினர்.

### புள்ளிவிபரங்கள்

போக்குவரத்து, போக்குவரத்துச்சபை அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் திரு அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"புதிய நியமனங்கள் பதவி உயர்வுகள் வழங்கப்படும் போது தமிழ்ப்பேசும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர் வேலைகள் வழங்க மறுக்கப்படுகிறது

"ரயில்வே திணைக்கள எழுதுவினைஞர் சேவையில் புதிதாக நியமனம் பெற்ற 24 பேரில் மூவர் மட்டுமே தமிழர்.

"ரயில்வே பாதுகாவலர் ('கார்ட்') நியமனத்தில் 83 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவர் மட்டுமே தமிழர்.

"புகையிரத நிலைய அதிபர், உதவி அதிபர் நியமனத்தில் 201 பேர் தெரிவு செய்யப்பட்டனர் இவர்களில் எட்டுப் பேர் மட்டுமே தமிழர்.

"போக்கு வரத்து அமைச்சர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராக இருந்தும் சிறுபான்மைமக்களுக்கு இவ்விதம் பாரபட்சம் காட்டியிருப்பது வேதனைக்குரிய விஷயமாகும். ரயில்வே திணைக்களத்தில் தமிழர் பலர் 15 - 30 வருடங்கள் சேவையாற்றிய போதிலும் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை. எதிர்காலத்திலாவது இப்படியாகத் தமிழர் புறக்கணிக்கப்படுவதைக் தடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றேன்" என்று குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம்:

(8-ம் பக்கம் பார்க்க)

## 2,500 ஆண்டுக்கு முற்பட்ட மனித எலும்புக்கூடு!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் ஐந்தடி நீளமான மனித எலும்புக்கூடு, நேற்று மாலை, பாதுகாப்புடன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி ஆனைக்கோட்டையில், அகழ்வாராய்ச்

8 ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி ரயில்களில் விரைவில் புதிய பெட்டிகள்!
### போக்குவரத்து அமைச்சர் உறுதி

(கொழும்பு)

கொழும்புக்கும் - காங்கேசன்துறைக்குமிடையே செயல்படும் சகல ரயில்களிலும் விரைவில் புதிய பெட்டிகள் இணைக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் ஜனுப் மொகமட் நேற்று பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

கொழும்பு - காங்கேசன்துறை ரயில்களில் இணைக்கப்பட்டுள்ள பெட்டிகள் எல்லாமே பழையனவாக இருப்பதாகவும், அதிகமான பெட்டிகளில் மின்வெளிச்சம், தண்ணீர் வசதிகள் இல்லை என்றும் காவலூர் எம் பி டண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்த புகாரை அடுத்தே அமைச்சர் புதிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

— — (ம)

## அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

திருவெம்பாவை முன்னிட்டு இன்று புதன்கிழமை முதல் காரைநகர் சிவாசிரமத்தில் தினமும் அன்னதானம் வழங்கப்படும்

## கொழும்பு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா
### மயில்வாகனத்துக்கு கௌரவப்பட்டம்

(கொழும்பு)

பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனத்திற்கு கொழும்பு பல்கலைக்கழகம், விஞ்ஞான கலாநிதி (Dsc)பட்டம அளித்துக் கௌரவிக்க இருக்கிறது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இம்மாதம் 22.ம் திகதி டண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

இ பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் மயில்வாகனம் பட்டமளிப்பு உரையையும் நிகழ்த்தவிருப்பது குறிப்பிடத்தக்கது.

கௌரவப்பட்டங்கள் பெற இருக்கும் ஏனைய பிரமுகர்கள் வருமாறு:.

முன்னாள்உதவிப் பதிவாளர் நாயகம் திரு. கே. ராஜேந்திரன்—முதுகலைமானி பட்டம் (M. A). வைத்தியபீடத்தின் முன்னாள் நுட்ப ஆராய்ச்சியாளர் திரு. எஸ். நாக

(8-ம் பக்கம் பார்க்க

உ

அருந்துங்கள் அண்ணா கோப்பி

சுன்னாகம் ஆதரவாளர்கட்கு ஓர் விசேட

நற்செய்தி!

ஏராளமான "அண்ணா கோப்பி" பாவனையாளர்களின் அன்பு வேண்டுகோளை ஏற்று சுன்னாகம் மத்திய சந்தைக் கட்டிடத்தில் அமைந்துள்ள எமது கிளை ஸ்தாபனத்தில் 18-12-80 வியாழக்கிழமை தொடக்கம் சூடாகவோ, குளிராகவோ "அண்ணா கோப்பி" அருந்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தொடர்ந்தும் எமது ஏனைய தயாரிப்புப் பொருட்களையும் சாய்ப்புச் சாமான்களையும் வழமைபோலப் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: வெற்றுப் பைக்கட்டுகளைச் சேகரித்து புதுவருட கலண்டர்களைப் பெற்றுக்கொள்ளத் தவருதீர்.

அண்ணா தொழிலகம் (கிளை)

இல. 1, மத்திய சந்தை, சுன்னாகம்.

யாழ்ப்பாண மாநகரசபை

ஏல விற்பனை அறிவித்தல்

வெற்றுத் தார் பீப்பாக்கள் உட்பட பல பழைய பொருட்கள் 19-12-80-ந் திகதி மு. ப. 10-00 மணிக்கு இம் மாநகரசபை பொதுக் களஞ்சியத்திற்குமுன்பாக பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்திபெற்ற கேள்விக்காரர் உரிய பணத்தை உடன் செலுத்தி பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

க. சிவஞானம்,
மாநகர
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

16,12-1980.

7655

ஹோம் பினன்ஸ் லிமிட்.

82, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம்

வருடாந்தம் ஆகக்கூடுதலான

25% வட்டியை

வழங்குகின்றது

ரூபா 1000,-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்

உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்

தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3.
தொலைபேசி : 89190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டி வீதி, புறாடி ஒழுங்கையில் உள்ள நிலக்காணி 2-3 லாச்சம் பரப்பளவு உடன் விற்பனைக்கு உண்டு. இக்காணி யாழ்ப்பாணக் கச்சேரி, நாவலர் வீதி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கு அருகாமையில் உள்ளது விபரங்களுக்கு தொடர்பு கொள்க: திரு A. M. புறாடி, யாழ்ப்பாணக் கல்லூரி, (F) பிளற்ஸ், வட்டுக்கோட்டை. 7654

வெலோசொலெக்ஸ் (மொடல் 3800) ஈஸ்டன் ஸ்போட்ஸ் சைக்கிள். செந்தில்நாதன், தில்லைவாசா, பிரதான வீதி, தெல்லிப்பழை. 7643

சாவகச்சேரி ஸ்ரேசன் ரோட்டின் அருகாமையில் சகலவசதிகளுடன் அமைந்த 2 1/2 பரப்பு வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு வே நடேசன், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. .644

## தேவை

சித்திரத்தில் ஆர்வமுள்ள பெண்கள் தேவை பயிற்சிக் காலம் 6 மாதங்கள். தேர்ச்சி பெற்ற பெண்களுக்கு உடன் வேலைவாய்ப்பு. கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். 7649

வயலின், வாய்ப்பாட்டு தகைமை பெற்ற ஆசிரியை யாழ்ப்பாணத்திலுள்ள இசை மன்றத்திற்கு தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல 7652, C/o ஈழநாடு லிமிட., யாழ்ப்பாணம். 765[illegible]

## லொறி விற்பனை

### 24 ஸ்ரீ 9744

நாவுண்டான் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 24 ஸ்ரீ 9744 இலக்க 'இசூஸு' லொறி விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கு மீளப்பெறக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 2,000/-மும், மீளப் பெறமுடியாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 50/-ம் செலுத்தவேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தகுதிபெற்ற கேள்விக்காரர் கேள்விப்பத்திரம் திறக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் உரிய தொகை முழுவதையும் செலுத்துவதுடன் வாகனத்தையும் சங்க வளவிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 27-12-80 வரை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் "தலைவர், நாவுண்டான் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், முருங்கன்" என்ற விலாசத்திற்கு 30-12-80 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது மேல் மூலையில் "லொறி விற்பனைக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல்வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும், வாகனத்தைப் பார்வையிடுவதற்கும் சங்க அலுவல் நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்க.

இங்ஙனம்,

செ. மரியாம்பிள்ளை,

தலைவர்.

நாவுண்டான்பகுதி
ப. நோ. கூ. சங்கம்,
முருங்கன்.
1980-12-14 7650

## பிறக்கும் குழந்தைகளுக்கு உணவுமுத்திரை இல்லை

(பண்டத்தரிப்பு)

டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆறுமாத காலத்திற்கு வழங்கப்பட்ட உணவு முத்திரைகளை பெற்றுக்கொண்ட குடும்பங்களில் புதிதாக குழந்தைகள் பிறக்கும் பட்சத்தில் அக்குழந்தைகளுக்கு உணவு முத்திரை பெறுவதற்கான சிபார்சு எதுவும் செய்ய வேண்டாம் என்று தமது பகுதியிலுள்ள கிராம சேவையாளர்களுக்கு வலிதென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் பணித்துள்ளார்.

உணவு ஆணையாளர் விடுத்த சுற்றறிக்கையின் பிரகாரம் உணவு முத்திரை பெற்றவர்களின் குடும்பங்களில் புதிய குழந்தைகள் பிறந்தால் அவற்றிற்கு உணவு முத்திரைக்காக சிபார்சு எதுவும் செய்யவேண்டாம் என்றும் இதுபற்றி தமது பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு விபரம் தெரிவிக்குமாறும் உதவி அரசாங்க அதிபர் திரு. கி. கோபாலரத்தினம் தமது கடிதத்தில்மேலும் தெரிவித்துள்ளார். (சு)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வண்ணார் பண்ணை வடகிழக்கு என்னும் இடத்தைச் சேர்ந்த நாகையா சிவப்பிரகாசம் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தினதும் உடைமைப் பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

சிதம்பரப்பிள்ளை நாகையா கைம்பெண் ஞானப்பூங்கோதை இல. 56, காமனியா, அவன்யூ 1ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழ. இல. T/3542

எதிராக

1. நாகையா முத்துக் குமாரசுவாமி
2. செல்லத்தம்பி பூபாலசிங்கமும்
3. பெண்செல்வநாயகியும்
4. மூத்ததம்பி மார்க்கண்டுவும்
5. பெண் சிவகாமசுந்தரி
6. நாகையா மகள் அமிர்தலட்சுமி
7. நாகையா தில்லைத்திருச்சிற்றபலம்

எல்லோரும் இல. 56, காமனியா அவன்யூ, 1-ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு தை மாதம் 23ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுகின்றனர்.

1980ம் ஆண்டு மார்கழி 2ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
தா. சங்கரப்பிள்ளை,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி
7611

## மருந்துக் கலவையாளர் வருடாந்தக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) சங்கத்தின் 40வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரம் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர் திரு ஆர். பி. ஹேவநாயக்கா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்திலிருந்தும் பெருந்தொகையான மருந்துக் கலவையாளர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (இ)

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியை திருமதி மனோன்மணி சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழகத்தின் முதுமானிப்பட்டம் பெற்றமையைப் பாராட்டி ஆசிரியர் சங்கத்தினர் எடுத்த விழா அண்மையில் நடைபெற்றது.

ஆசிரியர் ஆ. கனகசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி சோமசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (கு)

## மாத இறுதியில் திறக்கப்படும்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக அம்பன் கமநலச் சேவை நிலையத்தில் 25,000 ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் உரக் களஞ்சியம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

இவ்வுரக்களஞ்சியம் இம்மாத இறுதியில் திறந்துவைக்கப்படுமென அம்பன் கமநலச் சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பீதாம்பரம் தெரிவித்தார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதி 415ஐச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் வைத்திலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

விசுவலிங்கம் வன்னியசிங்கம், 415, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் ) இல. 3548

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
பெர. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1980 ஆம் ஆண்டு [illegible] மாதம் 9 ஆந் நாளாகிய இன்று பதியப்பட்டது.

7647

## தற்கொலை முயற்சி: இளைஞருக்கு நீதிபதி எச்சரிக்கை

(பண்டத்தரிப்பு)

கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்ய முயற்சிசெய்ததாக குற்றம்சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட 21 வயது இளைஞரை நீதிபதி கடுமையாக எச்சரித்து மூன்று வருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். இளவாலை மாரீசன்கூடல் என்னுமிடத்தைச் சேர்ந்த வைத்தியன் சிமியோன் என்ற மேற்படி இளைஞர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிபதி மேற்கண்ட தீர்ப்பை வழங்கினர்.

இவரது தாயார் இவ்வழக்கில் கட்சியமளிக்கையில், தமது மகன் தேட்ட வேலைகளை கவனியாது நண்பர்களுடன் சேர்ந்துசினிமாப் பார்க்க யாழ் நகர் அடிக்கடி செல்வதால் தாம் அவரை கண்டித்ததாகவும் இதைப் பொறுக்க முடியாத அவர் வீட்டிலிருந்த 'பொலிடோல்' கிருமிநாசினியைக் குடித்துவிட்டதாகவும், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் சிகிச்சை பெற்று குணமடைந்ததாகவும் தெரிவித்தார்.

நீதிபதி பிரஸ்தாப இளைஞரைக் கடுமையாக எச்சரித்து இதுபோன்றசெயல்களில் இனி மேல்ஈடுபடவேண்டாம் என்று புத்திமதி கூறி தாயாரின் பொறுப்பில் மூன்றுவருடகால நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினர். பிரஸ்தாப இளைஞரின் சார்பில் சட்டத்தரணி எஸ். தேவராஜா ஆஜரானர். (இ)

## கசிப்பு காய்ச்சியவருக்கு அபராதம்

(பண்டத்தரிப்பு)

சட்டவிரோதமான முறையில் தமது வீட்டில் இரவு வேளையில் கசிப்பு தயாரித்த நபர் ஒருவருக்கு யாழ் நீதிமன்ற நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்தார்.

ஆனைக்கோட்டையிலுள்ள வீடொன்றில் கசிப்பு தயாரிக்கப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து பொலிஸ்சார்ஜண்ட் திரு. தில்லைநாதுரை தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இரவு வேளையில் அவ்வீட்டை முற்றுகையிட்டபோது மேற்படி வீட்டுக்காரரானசெல்வத்துரை சிங்கராசா என்பவர் வேறு இரு இளைஞர்களின் உதவியுடன் கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாராம். பொலிசார் மூவரையும் கைது செய்ததுடன், கசிப்பு தயாரிக்கும் உபகரணங்களையும் 40 திரும் கசிப்பையும் கைப்பற்றினர்கள். இவர்களை யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது குற்றத்தை ஒப்புக்கொண்ட செல்லத்துரை சிங்கராசாவுக்கு நீதிபதி திரு. ஜோகநாதன் 500 ரூபா அபராதம் விதித்தார் மற்றும் இரு இளைஞர்களும் பாடசாலை மாணவர்களாக இருந்தமையால் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர். (கு)

## குறுகிய தூர கடுகதி பஸ் சேவைகள்

(டலோலி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போ சுப்பிரிண்டன் திரு. ஸ்ரீஸ்கந்தராசா பிரயாணிகளின் போக்குவரத்து வசதிகளைச்சீர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க நெல்லியடியிலிருந்தும், அச்சுவேலியிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்குக் குறுகிய தூர கடுகதி பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெல்லியடியிலிருந்து மூன்று பஸ்களும் அச்சுவேலியிலிருந்து 2பஸ்வண்டிகளும் இக்குறுகிய தூரகடுகதி பஸ் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகின்றன. (அ)

நத்தார் பெருநாளை முன்னிட்டு
மலிவு விலையில் கேக் தயாரிக்கும் பொருள்கள்
பிளம்ஸ் 100 கிறும்ஸ் ரூபா 5-50
ஜிஞ்சர் 454 கிறும்ஸ் ரூபா 2-00
சவ்சவ் 454 கிறும்ஸ் ரூபா 9-50
வனிலா ஆமன்ரோஸ் ரூபா 3-00
கன்டிபீல் 100 கிறும்ஸ் ரூபா 3-00
மற்றும் அழகு சாதன, விளையாட்டு, சாய்ப்புச் சாமான்களும் எம்மிடமுண்டு.
எஸ். பி. எஸ். லக்கிறேட் சென்ரர்
16, கிறுன் பசார், யாழ்ப்பாணம்.
போன்: 430 (7648)

பாத்திரங்கள் செய்யக்கூடிய
தரம்மிக்க
அலுமினியத் தகடுகள் (Circle)
விற்பனைக்குண்டு
1 றுாத்தல் விலை ரூபா 25/-
27 இறுத்தல் தகடுகள்கொண்ட பெட்டிகளில்
தேவையான அளவு பெற்றுக்கொள்ளலாம்
தகடுகளின் விட்டம் (DIAMETER),
தடிப்பு SWG ஆகிய விபரங்களுடன்
பின்வரும் ஸ்தாபனங்களுடன்
தொடர்புகொள்ளவும்
திரு ஏஜன்சீஸ் அன்ட் டிஸ்றிபியூற்றேர்ஸ்
63, பாங்சால் வீதி, கொழும்பு-11
திரு ஏஜன்சீஸ் அன்ட் டிஸ்றிபியூற்றேர்ஸ்
பிரதான வீதி, காங்கேசன் துறை
7646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி அரேபியாவும் எண்ணெய் விலையை அதிகரிக்கும்

பாலி டிச. 16 உலகின் மிகப்பெரும் எண்ணெய் உற்பத்தி நாடான சவூதி அரேபியா எண்ணெயின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.

சவூதி அரேபிய எண்ணெய்த் துறை அமைச்சர் ஜகுப் அகமட் ஷாகி ஜமானி, இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் 'ஒப்பெக்' நாடுகள் மகாநாட்டில் சவூதி அரேபியாவின் முடிவைத் தெரிவித்தார்

எண்ணெய்விலையை என்னவிகிதத்தில் உயர்த்துவதென்றோ. எப்போது இதன் விலையை அதிகரிப்பதென்றோ அவர் எதுவும் தெரிவிக்கவில்லை

எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் சவூதி அரேபியா மட்டுமே இதுவரை மிகவும் குறைந்த விலையில் எண்ணெய் விற்பனவு செய்து வருகிறது. (இ)

## ஈரானின் யோசனை நிராகரிப்பு

பாலி. டிச 16 இந்தோனேஷ்யாவில் நடைபெற்று வரும் 'ஒப்பெக்' மகாநாட்டின் ஆலோசனைப் பட்டியலில் ஈரான்-ஈராக் போரையும் சேர்க்குமாறு ஈரான் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (இ)

## "திருமலை தற்காலிக அரச ஊழியரை நிரந்தரமாக்குக"

### அரச அதிபர் அமைச்சருக்குக் கடிதம்

[திருகோணமலை] திருகோணமலை கச்சேரி உட்பட மாவட்டத்தில் உள்ள சகல அரசாங்க தற்காலிக ஊழியர்களையும் நிரந்தரமாக்குமபடியும் அப்படிச் செய்ய முடியாது போனால் அவ்வூழியர்களை பிரிமாமா ஆலையில் சேர்க்க ஆவன செய்யும்படியும் திருகோணமலை அரசாங்க அதிபர் பொது நிர்வாக அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

பெரும்பாலும் கச்சேரியில் வேலைசெய்யும் ஊழியர்கள் சேருவில எம்.பியின் வேலை வங்கிப்படிவத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

எத்தனையோ தமிழ் இளைஞர்கள் அரசாங்க அதிபருக்கு பிறிமா ஆலையின் வெற்றிடங்களுக்கு நியமிக்கும்படி கோரி உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் சிபார்சு செய்யப்பட்டும், இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லையாம். (கு)

## திருடப்பட்ட சைக்கிள்களை பொலிஸார் மீட்டனர்!

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணத்தில் அண்மையில் களவாடப்பட்ட சைக்கிள்களில் மூன்று சைக்கிள்களை யாழ்ப்பாணம் பொலிசார் மீட்டுள்ளனர்.

சைக்கிள் திருட்டுத்தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இச்சைக்கிள்கள் மீட்கப்பட்டன.

7-ம் வட்டாரம் மண்டைதீவைச் சேர்ந்தவரும் முல்லைத்தீவில் திருமணம் செய்தவருமான இராமலிங்கம் இராசலிங்கம் (25 வயது) என்பவரே பொலிசாரால் கைது செய்யப்பட்டவராவார்.

சந்தேக நபர் இம்மாதம் 11-ம் திகதி இரவு 7-30 மணியளவில் நாவலர் சந்தியில் திரைப்படம் பார்க்க நின்ற ஒருவரின் 1,500 ரூபா பெறுமதியான றலி சைக்கிளை திருடிக்கொண்டு ஓடியதைக் கண்ட யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியைச் சேர்ந்த கோபிநாதன் சிவகுமாரன் என்பவரின் உதவியுடனேயே பொலிசார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் விக்கிரமசிங்கா தலைமையில் பொலிஸ் கான்ஸ்டபிள்களான அ.வெ. தேவசகாயம், ஹேமரத்தின, இராஜரத்ன. தயானந்த, சாம்சன், பத்திரான ஆகியோர் நாவலர் சந்தியில் நடைபெற்ற சைக்கிள் திருட்டு சம்பந்தமாக திருட்டை நேரில் கண்ட சிவகுமாரன் என்பவரின் உதவியுடன் சந்தேக நபரை மறுநாள் காலை யாழ் பஸ் நிலையத்தில்வைத்து கைதுசெய்தனர்.

சந்தேக நபரை பொலிசார் விசாரணைக்குட்படுத்திய போது அவரால் நாவலர் சந்தியில் வைத்துத் திருடிய சைக்கிள் அல்லைப்பிட்டியிலுள்ள ஞானப்பிரகாசம் என்பவரது வீட்டில் வைத்திருப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து சைக்கிள் மீட்கப்பட்டது சந்தேக நபரை விசாரணைக்குட்படுத்திய பொலிசார் சந்தேக நபரால் நவம்பர் மாதம் 18-ம் திகதி யாழ். ஆஸ்பத்திரிக்கு எதிரே உள்ள ஹோட்டல் ஒன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான றலி சைக்கிள் ஒன்றைத் திருடி மண்டைதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயாக்கண்டு ஜெயக்குமார் என்பவருக்கு 325 ரூபாவிற்கு விற்றதாகத் தெரிவித்தாராம்.

நவம்பர் மாதம் 30-ம் திகதி இரவு யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள கள்ளுக்கடைக்கு அருகாமையில நின்ற சுமார் 850 ரூபா பெறுமதியான ஈஸ்ரேன் சைக்கிள் ஒன்றைத் திருடியதாகவும் இது மண்டைதீவு 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா செல்வலிங்கம் என்பவருக்கு 225 ரூபாவுக்கு விற்றதாகவும் சந்தேகநபர் தெரிவித்தாராம். பொலிசார் மண்டைதீவிற்குச் சென்று மேற்படி இரு சைக்கிள்களையும் கைப்பற்றினர்.

யாழ் பொலிஸ்கான்ஸ்டபிள் தேவசகாயம் சந்தேக நபரை பதில்நீதிபதி திரு.எஸ் கனகரத்தினம் முன் ஆஜர்செய்தபோது நீதிபதி சந்தேக நபரை இம்மாதம் 29-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேற்படிசைக்கிள்களை திருட்டுக்கொடுத்தவர்கள் யாழ் பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

## இவ்வுபதபால் நிலையங்களுக்கு தொலைபேசி

(மட்டுவில்) சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த மட்டுவில் உபதபால் நிலையமும் சங்கத்தானை உபதபால் நிலையமும் விரைவில் தொலைபேசி வசதியைப் பெறவிருக்கின்றன.

யாழ்.மாவட்ட தொலைபேசி தொடர்பு பொறியியலாளர் இத்தொலைபேசித் தொடர்பு அமைப்பிற்கான செலவின மதிப்பீடுகளை சாவகச்சேரி நகரசபையிடம் கொடுத்துள்ளார்.

மட்டுவில் உபதபால் நிலையத்தின் தொலைபேசி தொடர்பு அமைப்புக்காக ரூபா 85 ஆயிரமும் சங்கத்தானை உபதபால் நிலைய தொலைபேசி அமைப்பிற்கு ரூபா 15 ஆயிரமும் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## தேவரையாளி இந்துவில் கட்டிடப் பயிற்சி

(உடுப்பிட்டி) கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியிலுள்ள முழுநேரத் தொழில் நுட்பப் பிரிவில் கட்டிட அமைப்பு சம்பந்தமான பயிற்சிநெறி வகுப்பொன்று அடுத்தமாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறி வகுப்பில் சேரவிரும்புவோர் இம்மாத இறுதிக்குள் விண்ணப்பித்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## ஜனதா தலைமையில் எதிர்அணிகள் இணையவேண்டும்

### ராஜ்நாராயண் கூறுகிறார்

புதுடில்லி, டிச 16. இந்திய முன்னாள் ஜனதா அரசின் அமைச்சரும் ஜனதா 'எஸ்' கட்சித் தலைவருமான திரு ராஜ் நாராயண் தமது கட்சி ஆதரவாளர்களை ஜனதா கட்சியில் சேருமாறுகோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா எதிர்க்கட்சிகள் ஜனதா கட்சியின் தலைமையில் ஒன்றிணைய வேண்டும் என்றும் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

ஜனதாக் கட்சியின் தலைமையில இந்திய எதிர்க் கட்சிகள் இணைய வேண்டும் என்ற திரு. நாராயண் கூற்றைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்த ஜனதாக்கட்சித்தலைவர் திரு. எஸ். சந்திரசேகர் ஜனதா 'எஸ்' ஆதரவாளர்கள் ஜனதா கட்சியில் சேருவதைத் தாம் வரவேற்பதாகக் கூறினர்:

## வடமராட்சிக்கு உழவுயந்திரங்கள் தெளிகருவிகள்

[புலோலி] வடமராட்சிப்பகுதி விவசாய அபிவிருத்தி சமூகநலச்சேவைத் திணைக்களம் இரண்டு உழவு இயந்திரங்களையும் இருபத்தேழு தெளிகருவிகளையும் அனுப்பி வைத்துள்ளது

புலோலி கமநலச் சேவை நிலையப்பகுதி விவசாயிகளின் தேவைகளுக்கென ஒரு உழவு இயந்திரமும் பதினாலு தெளிகருவிகளும் அம்பன்கமநலச் சேவை நிலையப் பகுதிவிவசாயிகளின் தேவைகளுக்கென ஒரு உழவு இயந்திரமும் பதின்மூன்று தெளிகருவிகளும் பயன்படுத்தப்படவுள்ளன. [அ]

## கோணேஸ்வரர் ஆலயத்தில் யந்திரபூசை

(யாழ்ப்பாணம்) திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் ஜனவரிமாதத்தில் நடைபெற இருப்பதால் அதற்கான யந்திரபூசை சென்ற புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. ஆலய திருத்தவேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன.

யந்திரபூசை, ஹோமம் ஆகியவற்றை நயினை பிரதிஷ்டா பூஷணம் சுவாமி நாதபரமேஸ்வரக்குருக்களும் தா. மகாதேவக்குருக்களும் நடாத்தி வைத்தார்கள். இக்கும்பாபிஷேகத்திற்கு தமிழ் நாட்டிலிருந்தும் பல சிவாச்சாரியர்கள் வருகைதர இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சொ)


# வொலரோன் ஈ. சீ. 50%

வொலரோன் ஒரு சர்வபூச்சி நாசினி. மிளகாய், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் தத்துவெட்டி, வெட்டுப்புழு முதலாம் சகல தரைப் பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்டும், மிளகாய், வெங்காயப் பயிர்க் கம்பளப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் விசேஷ சக்தி வாய்ந்தது வொலரோன்.




ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
தொலைபேசி: 93563, 96331-6

MelAds

200 மி.லீட்டர் ரூபா 45-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வாக்கு

உலகப் பொருள்களின்மீது ஒரு லவலேசப் பற்று இருப்பினும் கடவுளைக் கண்டறிய முடியாது. நூலின் மிகச் சிறு இழை ஒன்று நீட்டிக் கொண்டிருந்தாலும் ஊசியின் காதுவழியாக நூல் நுழைய முடியாது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# சிறுவர் அடிமைமுகாம்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை

## சிறுவர்கள் கடத்தல் அதிகரிப்பை அடுத்து ஏற்பாடு

(கொழும்பு)

சிறுவர் அடிமை முகாம்களை கண்டு பிடித்து அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தீட்டியுள்ளது.

பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்ட உயர்மட்ட மகாநாடொன்றிலேயே மேற்படி திட்டம் தீட்டப்பட்டது.

அடிமை முகாம்களைக் கண்டு பிடிப்பதற்காக வரைபடம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. ரி. குணசேகரா தலைமையில் அமைச்சில் நடைபெற்ற மகாநாட்டில் பிரதிப்பொலிஸ் மாஅதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் ரியர் அட்மிரல் ஏ. டி. எச். பெரேரா, பிரிகேடியர் ரி. ஐ வீரதுங்கா. லெப்டினன்ட் கேர்ணல் ஏ. சூரியபெருமா, காப்டன் யூ. டபிள்யூ பெர்னாண்டோ பொலிஸ் சுப்பிரிண்டன்ட் எஸ். பி. சேனரத்ன, பிரதி நில அளவை மாஅதிபர் திரு. டபிள்யூ. கே. எச். டி சில்வா, குழந்தைகள் பராமரிப்பு தலைவர் திரு. வை. எம். டபிள்யூ பண்டார ஆகியோர் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

நாடெங்கிலும் அநேக சிறுவர்கள் காணாமல் போய்விட்டதாகக் கிடைத்த புகார்களை அடுத்து சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோக கருணரத்னவின் உத்தரவின் பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சிறுவர் அடிமை முகாம்களைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக நாடு முழுவதிலும் காணாமற் போன சிறுவர்களின் பட்டியலைத் தயாரிக்குமாறு பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் தலைமை அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

இதே வேளையில் நாடெங்கிலும் மீன் வாடிகளைக் கண்டு பிடிக்கும் பொருட்டு நாடு பூராவும் உடனடியாக ஆகாய மூலம் தேடுதல் நடத்துவதெனறும் இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. (ஓ)

## பெருமாள்கோவிலில் நாளை ஏகாதசி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் நாளை வியாழக்கிழமை சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் நடைபெறவுள்ளது.

அதிகாலை 4-30 மணிக்குத் திருப்பள்ளி எழுச்சியையடுத்து மூலவருக்கு உருத்திராபிஷேகமும் 5-30க்கு சுவர்க்கவாயில் திறத்தலும் இடம்பெறும். தொடர்ந்து ஏகாதசி மகிமை பற்றி பிரமஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரை நிகழ்த்துவார் தொடர்ந்து விசேஷ பூசைகளும் அபிஷேகஆராதனைகளும் நடைபெற்று இரவு 7 30 மணிக்கு சுவாமி வீதி உலா வருவார்,

இரவு 11 மணிக்கு வித்துவான் க. சொக்கலிங்கம் "திருமால்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார் 12 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 'திருமால் பெருமை' பற்றிச் சங்கீதகதாப்பிரசங்கம் நிகழ்த்துவார் ஒரு மணிக்கு கண்ணன் நாம பஜனை.

வெள்ளிக்கிழமை அதிகாலை விசேஷ அபிஷேக ஆராதனையும், காலை 6 மணிக்கு துவாதசி உற்சவமும் நடைபெறும். (அ)

# மக்கள் கருத்து

## இத்தவறணையை அகற்றுவார்களா?

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு மிகமிக அண்மையிலுள்ள ஒழுங்கையில் 6-12-80ல் ஒரு சாராயத்தவறணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரிச் சூழலில் இதை அமைக்கவேண்டாமென மேலிட உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் அரசியல் பிரமுகர்களுக்கும் ஆட்சேபனைக் கடிதங்கள் எழுதியும் அக்கிராம மக்கள் பலர் எதிர்ப்புக்கள் தெரிவித்தும் தொடர்ந்தும் தவறணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இத்தவறணை காரணமாக இப்பகுதியில் மக்கள் அமைதியாக வாழ முடியவில்லை. கல்லூரி மாணவரையும் இது பாதிப்பதாயுள்ளது. எனவே உரிய இலாகாவினர் இப்பகுதி மக்களினதும் மாணவர் நலன் பேணியும் இத்தவறணையை இவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டுமென்று தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நலன்விரும்பிகள்
சுழிபுரம்.

∴ ∴ ∴ ∴

## பாராமுகம் ஏன்?

வேலணை துறைமுகத்தில் உள்ள மதகு ஒன்று உடைந்த நிலையில் பல மாத காலமாக திருத்தப்படாமல் இருக்கின்றது. இதனால் அண்மையில் உள்ள ஐயனார் வித்தியாலயத்திற்கு செல்லும் மாணவர்களும், ஆசிரியர்களும் இம்மதகையே கடந்து போவதால் மிகவும் துன்பம் அடைகின்றார்கள். வேலணை தெற்கு சுடுகாட்டிற்கும் இம்மதகைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். இதனால் பிரேதம் கொண்டுசெல்லவோ, வாகனங்கள் போகவோ வரவோ முடியாத நிலையில் இருக்கும் பொழுது இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் இதில் ஏன் பாராமுகமாய் இருக்கின்றன என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இ. பாலசுப்பிரமணியம்
வேலணை-

## கல்லூரி வீதி விபுலாநந்தர் வீதியாகமாறும்

(திருகோணமலை)

திருகோணமலை மக்களின் கல்வி வளர்ச்சிக்கென இந்துக் கல்லூரியை அமைத்துக் கொடுத்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சேவையை கௌரவித்து தற்பொழுது கல்லூரிவீதியாக இருக்கும் வீதிக்கு 'விபுலாநந்தர்' வீதி என பெயர் சூட்டும் தீர்மானம் திருமலை நகராட்சி மன்றத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுவாமி விபுலாநந்த அடிகள் திருகோணமலை இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து கல்விப் பணியுடன் தமிழ்ப்பணியும் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## இடமாற்றம்

(சுழிபுரம்)

விளையாட்டு உத்தியோகத்தர் திரு இ. சுப்பிரமணியம் தை மாதம் முதல் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குஇடமாற்றம் பெற்றுள்ளார். இவர் முன்பு செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றியவர்.

## சமயதீட்சை

(சுழிபுரம்)

சுழிபுரம் கம்பளை அம்பாள் ஆலயத்தில் இருபத்தைந்து பேருக்கு சமயதீட்சை வைக்கப்பட்டது. சுழிபுரம் பிரம்மஸ்ரீ ந. சோமஸ்கந்தக் குருக்கள் தீட்சை வைப்பதை நிறைவேற்றிவைத்தார்.

# நமது நோக்கு

## பாராளுமன்ற நீதிமன்றம்

நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்றம் நீதிமன்றமாகக் கூடி பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறிய ஒருவருக்கு விசாரணையின்பின் ஐயாயிரம் ரூபா அபராதமும், சபை கலையும் வரை மறியல் தண்டனையும் விதித்த செய்தி மக்களைச் சிந்திக்க வைக்கும்.

குற்றவாளியாகக் காணப்பட்டவர் ஒரு பேராசிரியர், அது மட்டுமல்ல; அரசாங்க கூட்டுத்தாபனத்தின் தலைவர் என்ற ரீதியில் சபையில் நடைபெற்ற நிதி ஒதுக்கீட்டு விவாதத்தைக் கவனித்துக் கொண்டிருந்தவர்.

பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் நிகழ்த்திய உரையில் கூட்டுத்தாபனக் கண்டனம் தெரிவித்த காரணத்தினால் அவர் சபையை விட்டு வெளியே சென்று கொண்டிருந்தபோது குறிப்பிட்ட அங்கத்தவரை பயமுறுத்தி அவதூறாகப் பேசினார்.

இந்தக் குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் தலைவரும் மற்றைய அங்கத்தவர்களும் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது குற்றஞ் சாட்டப்பட்டவர் உடனே சபைக்குக்கொண்டு வரப்பட்டார். விளக்கத்திற்கு இரண்டு நாள் அவகாசமே கொடுக்கப்பட்டது. விளக்கத்திற்கு அவர் வர முன்னரே கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

எஞ்சியிருந்த பேராசிரியர் பட்டத்துடன் விசாரணைக்கு வந்த முன்னைநாள் கூட்டுத்தாபனத் தலைவர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டு சபைக்கும் குறிக்கப்பட்ட அங்கத்தவருக்கும் தமது மன்னிப்பைச் சமர்ப்பித்தார்.

பதவியை ஏற்கனவே பறிகொடுத்த பேராசிரியர் சிறையிலடைக்கப்படுவது தர்மமாகாது அபராதத்துடன் அவரைத் தப்ப வைக்க வேண்டுமெனச் சபை உரை சபாநாயகர் அத்தீர்ப்பை வழங்கினார்.

இச்சம்பவம் பொதுமக்கள் பலருக்கு ஒரு அதிசயமாகத்தோன்றும். ஆயினும் பாராளுமன்றம் எந்நேரமும் நீதிமன்றமாகக் கூடலாம். பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குப் பங்கம் விளைவிப்பவர் எவருக்கும் உடனடி தண்டனை வழங்கலாம். அத்தண்டனைக்கோ தீர்ப்புக்கோ எதிராக அப்பீல் செய்ய இடமில்லை என்பதை பிரஜைகள் யாவரும் அறிய முடிகிறது.

இதன் அடிப்படைக் கருத்து பொதுமக்களுக்குப் புரிய முடியாததொன்றல்ல. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட மன்றமே பாராளுமன்றம். அது நாடாளுமன்றம் அங்கு கூடி நாட்டின் விவகாரங்களை ஆராய்ந்து ஆலோசனை வழங்கும் பொறுப்புடைய உறுப்பினர் எவரும் எவ்வித அச்சமுமின்றித் தங்கள் கடமையைச் செய்ய பூரண உரிமை உடையவர்கள்.

இந்த உரிமையை நிராகரிக்க முயல்பவர் நீதிமன்றத்தில் வாதாடி, வழக்கறிஞர் உதவியுடன் தப்பும் வாய்ப்பற்றவர். அவர் யாராயும் இருக்கலாம். சட்டத்தின்முன் பேராசிரியரோ பாமரமனிதரோ யாரும் சமம். அதேசமயம் குற்றஞ் சாட்டப்பட்டவர் ஆறியமர்ந்து தன் வழக்கைத் தயார்பண்ணும் சலுகையற்றவர். நிவர்த்தியின்றி தண்டனை வழங்கப்படும்.

பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படும் குற்றம், அரசனை நிந்தனை செய்யுங் குற்றத்திற்கு ஒப்பானது. எனவே இச்சம்பவம் நல்ல படிப்பினையாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை. இதில் இன்னொரு விசித்திரம் உண்டு குற்றஞ் செய்தவர் அரசைச் சார்ந்தவரும் பதவியுங் கொண்டவர்; தாக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அரசகட்சியைச் சேர்ந்தவர்; குற்றத்தை முறையிட்டவர், எதிர்க்கட்சித் தலைவரும் அவருடைய சகாக்களும். இதனை ஆமோதித்தவரும் இதற்கு வேண்டிய தண்டனைபற்றி ஆலோசனை கூறினவரும் அரசாங்கக் கட்சியினர். பாராளுமன்ற மரபு நல்ல முறையில் பேணப்பட்டிருக்கிறது.

கலவாணைப் பிரச்னையால் மலாரடிப் பட்டிருக்கும் பொதுமக்களுக்குப் பாராளுமன்றச் சிறப்புரிமைகள் என்ன, அதன் இறைமை எத்தகையதென்பது பற்றி ஒருவித விளக்கம் ஏற்பட்டிருக்கிறது,

ஆயினும் பாராளுமன்ற நீதிமன்றத்திற்கும், நாட்டின் உயர்நீதிமன்றத்திற்கும் உரிய தத்தம் அதிகாரமும் உரிமையும் இன்னுங் கருகலாகவே இருக்கின்றன

சட்டப் பண்டிதர்கள் போரிடும்போது சாதாரண மனிதன் என்ன செய்யலாம்? சாதாரண பிரஜையின் விழிப்புணர்ச்சியிலே தான் சுதந்திரம் தங்கியிருக்கிறது என்பது வெறும் வேதாந்தமா?

# நாடும் நடப்பும்

யாழ். லயன்ஸ் கழகம் நத்தார் - புதுவருட வாழ்த்து மடல் ஒன்றை அழகாகத் தயாரித்துக் குறைந்த விலையில் விற்பனைக்கு விட்டிருக்கிறது. வலதுகுறைந்தோர் வருடமாக 1981-ம் வருடம் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதால் வலது குறைந்தோர் நிலை பற்றி கோலந்து ஓவியர் ஒருவரின் ஓவியம் இந்த வாழ்த்துக்கார்ட்டின்முகப்பை அலங்கரிக்கிறது.

யாழ் லயன்ஸ் கழகத்தின் 'உதவும் கரங்கள்' திட்டத்தின் கீழ் உள்ள வலதுகுறைந்தோர் இல்ல நிதிக்காக இந்த வாழ்த்துக் கார்ட்டுகள் விற்கப்படுகின்றன. ஒரு வாழ்த்துக் கார்டு என்வலப்புடன் ஒரு ரூபாய் எழுபத்தைந்து சதம் தான்.

நல்ல நோக்கத்துடன் நல்ல பணிக்காக விற்கப்படும் இந்த நத்தார் புதுவருட வாழ்த்துக் கார்டுகளை வாங்குபவர்களுக்குப் புண்ணியம் சேரும்.

0 0 0

மட்டக்களப்பில் எத்தனை பேர் அமைச்சராலென்ன மழைகாலத்தில் மட்டக்களப்புப் பிரயாணம் கஷ்டம் கஷ்டந்தான்!

மன்னம்பிட்டியைத் தாண்டிச் செல்வதென்பது மழை காலத்தில் நிச்சயமல்ல!

மழைகாலத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ள சமயத்தில் பிரதமர் பிரேமதாசாவை மோட்டார்க்காரில் மட்டக்களப்புக்கு அழைத்துச்சென்றால் அதன் பின்னர் போக்குவரத்துச் சீராகலாமென்று மன்னம்பிட்டியில் சமீபத்தில் நள்ளிரவில் சில மணிநேரம் தவங்கிடக்க நேர்ந்த ஒரன்பர் தெரிவிக்கிறார்.

0 0 0

போப்பையர் என்றழைக்கப்படும் ஜி. யு. போப் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் திருவாசகத்தில் உருகியவர். அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருவெம்பாவைப் பாடல்கள் சிறு பிரசுரமாக சில இலங்கை இந்துமாமன்றத்தினரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. கொழும்பில் நடைபெற்ற மனித உரிமைகளும் சமயமும் என்ற கருத்தரங்கில் இந்தப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது மிகப் பொருத்தமே!

0 0 0

யாழ்ப்பாணத்துக்கு வரும் வெள்ளைப்பச்சையும், அரிக்கன் அரிசியும் கள்ளச்சந்தையை நோக்கி லொறிகளில் கொழும்புக்குத் திரும்பிச் செல்வதாக யாழ். மாவட்ட அமைச்சர் கலந்துகொண்ட ஒரு கூட்டத்திலேயே குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இது பாரதூரமான குற்றச்சாட்டு. முன்னர் யாழ் மாவட்டத்தில் ஆனையிறவுக்கு அப்பச்சமாக யாழ்ப்பாணத்துக்கு அரிசி கொண்டு வருவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த சமயம் ஆனையிறவில் வாகனங்கள் சோதனையிடப்பட்டன. பல அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டன இப்பொழுது அரிக்கனும் வெள்ளைப்பச்சையும் இங்கிருந்து போவதைத் தடுக்க முடியாதா?

# ஊர்சுற்றி

## திருவெம்பாவை

(திருகோணமலை)

திருகோணமலை சிவன்கோயிலில் திருவெம்பாவை நிகழ்ச்சிகள் வழமைபோல நடைபெற்று வருகின்றன.

விசேடமாக பிச்சை ஆண்டவர், காசியாத்திரை, பிட்டுக்கு மண்சுமந்தவை போன்ற சிவனின் திருவிளையாடல்களுடன் தேர்த்திருவிழாவும், இறுதி நாளான திருவாதிரை அன்று 'நடராசப்பெருமான்' திருநடனமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாடு

## இந்துசமய திணைக்களம் வேண்டுகோள்

(கொழும்பு)

சகல ஆலயங்களிலும் "திருவெம்பாவை" நாள் தொடக்கம் சமத்துவவழிபாடு நடைபெற உடனடியாக வழிவகை செய்யப்படுதல்வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக இந்து சமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு. வி. என். சிவராசா, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்கள் (?) செயலாளர், இந்துக் கோவில் தர்மகர்த்தாக்கள், உதவி அரசாங்க அதிபர்கள் இந்துசமய நிறுவனங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

21 நாள் விநாயகர் விரதம் நிறைவேறி சைவர்களாகிய எம் முழுமுதற் கடவுளாம் சிவபெருமானுக்குத் திருவெம்பாவை பூசை நடைபெறும் நேரம் தொடக்கம் இத்தீர்மானம் நிறைவேறும் புனித வேளையாகக் கணிக்கப்படும்.

தமிழ் வேதமாகிய திருமுறைகளில் ஒன்றாகிய சைவ களஞ்சியமாம் பெரியபுராணம் கூறும் நாயன்மார் வரலாறு பண்டைத்தமிழர் பண்பாட்டினை விளக்கும் தொல்காப்பியம் வகுத்த மக்கட் பாகுபாடு குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் பாலை ஆகிய ஐந்திணை பாகுபாடு மட்டுமே என்ற காரணம் 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் என சாதி இரண்டொழிய வேறில்லை எனும் ஔவைப் பிராட்டியின் வாக்கு, ஆகிய தமிழர் சால்பு கூறும் ஆதாரங்களின் அடிப்படையிலும் இலங்கையின் பாடல் பெற்ற தலங்களாகிய திருக்கேதீசுவரம், திருக்கோணேசுவரம், புகழ்பெற்ற தலங்களாகிய கதிர்காமம், முனீசுவரம், பொன்னம்பலவாணேசுவரர், நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி ஆகிய ஆலயங்களிலும் யாழ்ப்பாண குடாநாட்டிற்கு வெளியே சகல ஆலயங்களிலும் சமத்துவ வழிபாடு நடைபெறுகின்ற காரணத்தாலும், ஒரு சில ஆலயங்கள் மட்டுமே மனிதாபிமானக் கொள்கைக்கும் மக்கள் அனைவரும் மகேசுவரன் சொரூபம் என்னும் எச்சமயத்தின் அடிப்படைக் கோட்பாட்டிற்கு மாறாக நடந்துகொள்வது பொருத்தமற்றது என்ற காரணத்தாலும் ''சாதியிலும் சமயமே சிறந்தது'' என்னும் நாவலர் பெருமான் வாக்கிற்கிணங்க சமய அடிப்படையிலேயன்றி சாதி அடிப்படையில் சமத்துவ வழிபாடு மறுக்கப்படுதல் சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளமையாலும், இத்தீர்மானம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டதுமன்றி இதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# துணுக்காய்ப் பகுதியில் மழையின்றி பயிர்கள் வாடுகின்றன

(துணுக்காய்)

துணுக்காய், வவனிக்குளம், பாண்டியன்குளம், தென்னியன்குளம், மல்லாவி, யோகபுரம், கல்விளான் போன்றவிவசாயப் பிரதேசங்களில் மழை பெய்யாமையினால் விவசாயிகள் பெரும் அவலநிலையை எதிர்நோக்கியுள்ளனர். நெல்விதைத்தவர்கள் பசளை போடுவதற்குத் தண்ணீர் இல்லை என்றும் நெல்விதையாதவர்கள் உழுவதற்குத் தண்ணீர் இல்லையென்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

சிறுதானியங்கள் மற்றும் நெற்பயிர்கள் மழையின்றி வாடிவதங்குவதை இப்பகுதியில் காணக்கூடியதாக இருக்கின்றது. பாரிய நீர்ப்பாசனத் திட்டமான வவனிக்குளம் குளத்திலும் போதிய நீர்வந்து சேராமையினால் விவசாயிகளுக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்படலாம். மழை தொடர்ந்து பெய்யாவிடின் இப்பகுதி மக்கள் பெரும் இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியிருப்பதுடன் நாட்டின் பொருளாதார நிலையும் பாதிக்கப்படுமென அஞ்சப்படுகிறது. (அ)

# நூலகவியல் பயிற்சியாளர்கள் தெரிவாகினர்

(புலோலி)

கொழும்பு பல்கலைக்கழக இலங்கை நூலகவியல் சங்கத்தினால் நடாத்தப்படும் நூலகவியல் விஞ்ஞானப் பிரிவு, தகவற்றுறையில் விஞ்ஞான ஆய்வு பற்றிய பயிற்சிநெறியினை மேற்கொள்வதற்கான (1981 ம் ஆண்டு) பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நூலகவியல் விஞ்ஞானப் பயிற்சி நெறி மும்மொழிகளிலும் நடாத்தப்படுமென்றும் நாடு பூராவிலும் இருந்தும் இப்பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்கு நூலகப்பயிற்சியாளர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என்றும் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இடங்களிலும் இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேசத்தில் இருந்து இப்பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நூலகவியல் பயிற்சியாளர்கள் அடுத்த மாதம் 11-ம் திகதி பதிவு செய்யப்படுவார்கள் என்றும் இலங்கை நூலகவியல் சங்க கல்வி அதிகாரி திரு ஜே. வி. பெர்னாண்டோ அறிவித்துள்ளார். (அ)

# முழு நாளும் நீர் கிடைக்கும்

(மன்னார்)

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலை பிரசவ விடுதிக்கு 24 மணிநேரமும் தண்ணீர் கிடைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வசதியை எருக்கலம்பிட்டி கிராம அபிவிருத்திச்சங்கம் சுமார் 5 ஆயிரம் ரூபா செலவில் செய்து கொடுத்துள்ளது. மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொண்ட எருக்கலம்பிட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கம், பிரதான நீர்த்தொட்டியிலிருந்து பிரசவ விடுதிக்கு குழாய் ஒன்றை இணைத்தது. இதன் மூலம் பிரசவவிடுதிக்கு 24மணி நேரமும் தண்ணீர் கிடைத்து வருகிறது. (ஈ)

# பரீட்சார்த்திகள் கஷ்டம் நீங்கியது

(துணுக்காய்)

க. பொ. த. சாதாரணதரம் புதிய பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுப்பவர்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி மத்திய மகா வித்தியாலயமும் பரீட்சை நிலையமாக இயங்கி வருகிறது. இதனால் பாண்டியன்குளம், மல்லாவி, துணுக்காய், வவுனிக்குளம், யோகபுரம், கல்விளான் பகுதி மாணவர்களுக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளது. இல்லாவிடின் பெருந்தொகை பணத்தையும் செலவழித்து கஷ்டங்களையும் அனுபவித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்குத்தான் மாணவர்கள் செல்லவேண்டியிருக்கும். கல்வி இலாகாவின் முயற்சியால் இப்பகுதி மாணவர்கள் நன்மை பெற்றுள்ளனர். (அ)

# 'போனஸ்' வழங்கமுடிவு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் கடந்த 1979ம் ஆண்டு சங்கத்திற்குக் கிடைத்த இலாபப்பணத்திலிருந்து 'போனஸ்' வழங்குவது என்று சங்க பொதுச்சபை அண்மையில் கூடிய போது ஏகமனதாகமுடிவு செய்துள்ளது. சங்கத் தலைவர் திரு. எஸ். மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ)

# 'தித்திக்கும் திருவாசகம்'

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 5-30 மணிக்கு கொழும்புத்துறை இலந்தைக்குளம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் 'தித்திக்கும் திருவாசகம்' என்னும் பொருள்பற்றி ஈழவேந்தன் உரை நிகழ்த்துவார்.

# யாழ். பல்கலைக்கழக நூல்நிலையத்தில் தனிநாயகம் அடிகளின் உருவப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக நூல் நிலையத்தின் தென கிழக்காசியப் பிரிவில் மறைந்த தமிழ்ப் பேரறிஞர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் உருவப்படம் ஒன்றை பல்கலைக்கழக வேந்தர் திரு வி. மாணிக்கவாசகர் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தனிநாயகம் அடிகளார் தமிழ் உலகுக்கு ஆற்றிய அரும் பெரும் பணிகள் பற்றி வேந்தர் திரு மாணிக்கவாசகரும், உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் இவ்வைபவத்தில் எடுத்துரைத்தனர்.

இவ்வைபவத்தில் யாழ். ஆண்டகை கலாநிதி பி. தியோகுப்பிள்ளையின் சார்பில் வணபிதா கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தனிநாயகம் அடிகளின் உறவினர்கள் சசர்பில் திரு திருமதி பிலிப்புப்பிள்ளை திரு. ராஜன் பிலிப்புப்பிள்ளை, வணபிதா ஜே. ஏ. கருணாகரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ஞானம்ஸ் ஸ்ரூடியோ உரிமையாளர் அடிகளாரின் உருவப்படத்தை அன்பளிப்புச் செய்தார். (இ)

# இடமாற்றம்

(துணுக்காய்)

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள இரு கிராமசேவை அலுவலர் பிரிவு கிராமசேவை உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்துக்கு அடுத்த மாதம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர். யோகபுரம் கிராமசேவை அலுவலர் திரு க. கேதீஸ்வரன் அச்சராயன் குளத்துக்கும் புத்துவெட்டுவான் கிராமசேவை அலுவலர் திரு. ம. ஆரோக்கியநாதன் வரணி குதிக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (அ)

# சோவியத்தில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு

மாஸ்கோ, டிச.16

லக்ஷ் பள்ளத்தாக்கில் அட்ஜிடெபெ குன்றில் தொல்பொருள் ஆராய்ச்சி நடத்தும் ஆராய்ச்சியாளர்கள், ஒரு பழைய புத்தர் கோயில் இடிபாடுகளைத் தோண்டிப்பார்த்த பொழுது 13 மீட்டர் உயரமுள்ள ஓர் அரிய புத்தர் சிலையைக் கண்டெடுத்தனர். புத்தர் வலது பக்கம் திரும்பிப் படுத்திருப்பது போல் இந்தச் சிலை வடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோவிலில் இடிபாடுகளுக்கு அடியிலிருந்து 6,7ம் நூற்றாண்டுகளைச்சேர்ந்த மற்றும் பல கலைத்திறைச் சுவர் பொருள்களும் சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. (இ)

# யாருடையது?

புங்கன்குளம் சந்திக்கு அண்மையில் அரியாலையைச்சேர்ந்த சுந்தையா மயில்வாகனம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட உணவு முத்திரைஅடிக்கட்டைகள் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# 'பிரட்' காலமானார்

(கொழும்பு)

பிரபல பத்திரிகையாளரான திரு எம். எப். எல். டி. சில்வா தமது 75 வது வயதில் காலமானார்.

'பிரட்' என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் 50 ஆண்டு காலமாக பத்திரிகையாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பூதவுடல் நேற்று வத்தளையில் அடக்கம் செய்யப்பட்டது. (இ)

# வடமராட்சிக்கு நல்லின தென்னங்கன்றுகள்

(புலோலி)

வடமராட்சிப் பகுதி மக்களுக்கு நல்லின தென்னங்கன்றுகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலுப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு 4,000 நல்லின தென்னங்கன்றுகள் வந்து சேர்ந்துள்ளன.

இத் தென்னங்கன்றுகளைப்பெற விரும்புபவர்கள் இன்பருட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. என். சிவபாதசுந்தரத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (அ)

# 21 பொலிசார் வேலை நீக்கம்

புதுடில்லி, டிச 16

மத்தியப்பிரதேசத்தில் கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட 21 பொலிசார் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். (இ)


நியாயமான விலையில் சிறந்த ரேடியோ

சீடில்ஸ் மொடல் ST 310 I C ஒரு அலைவரிசை மத்திய அலை ரேடியோ - 4 மின்கல இயக்கம் - ரூ. 425/-
சீடில்ஸ் மொடல் ST 320 I C இரண்டு அலைவரிசை மத்திய அலை /சிற்றலை - 4 மின்கல இயக்கம் ரூ. 625/-
சீடில்ஸ் மொடல் ST 73 A மூன்று அலைவரிசை மத்திய அலை /சிற்றலை 1/சிற்றலை 2 - 4 மின்கல இயக்கம் ரூ. 625/-

எல்லா மொடல்களுக்கும் 12 மாத உத்தரவாதமும் நம்பகமான விற்பனைப் - பின் - சேவையும் கிடைக்கும்.

சீடில்ஸ் சினி ரேடியோ
9-10 பூத்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 27311




எல்லா சிறந்த விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழர் விடுதலைக் கூட்டணியினரால்

# 100 ஆண்டுகள் சென்றாலும் 'தமிழீழம்' பெற முடியாது"

## ஆனைக்கோட்டையில் யாழ் மாவட்ட அமைச்சர்

(கோண்டாவில்)

"தமிழர்விடுதலைக்கூட்டணியினர் கடந்த முப்பது வருடகாலமாக தமிழ்மக்களின் முன் சமஷ்டி, தமிழ் ஈழம் என்று கூறி வாக்குப்பெற்று பாராளுமன்றக்கதரைகளை அலங்கரித்து வந்தார்கள். ஆனால் இவர்கள் நூறு வருடங்கள் சென்றாலும் கூட ஈழம் பெறமுடியாததுடன் எந்தக்காலத்திலும் அரசையும் அமைக்க முடியாது. இதை ஒவ்வொரு தமிழ்மக்களும் சிந்தித்து செயலாற்றவேண்டும். நாட்டு அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் சேர்ந்து ஒவ்வொரு குடிமகனும் அபிவிருத்தித்திட்டத்திற்கு உழைக்க வேண்டும்" என்று யாழ். மாவட்டஅமைச்சர் திரு யூ பி. விஜயக்கோன் கூறினார்.

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் ஐக்கியதேசியக்கட்சிக் கிளை திரு. எஸ். சோமேஸ்வரன் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. இக் கிளையை யாழ் மாவட்ட அமைச்சர் திரு.யு. பி. விஜக்கோன் திறந்துவைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"தமிழர்விடுதலைக்கூட்டணியினர் 'இறந்த' ஒருவருக்குஆதரவு தேடி வருகின்றனர். இவர்களினால் தமிழ்ஈழத்தையோ அன்றி அரசையோ அமைக்க முடியாது. இந்நிலையில் சிறிமாவுக்கு ஆதரவு தேடிவருவதன் மர்மம் என்ன? இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பலத்தை இழந்துவருகின்றார்கள். இதன் காரணமாக சிறிமாவோ பண்டாரநாயக்காவை அழைத்துவந்து ஆதரவு தேடுகின்றனர். இதனால் எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை! 1970-77 ஆண்டுக் காலம் பிரதமராக இருக்கும் பொழுது தமிழ்மக்களுக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்கும் செய்த தீங்கிற்காகவா தமிழர்விடுதலைக் கூட்டணியினர் நன்றியுடன் சிறிமாவை அழைத்து விருந்துவைக்கின்றனர்.

"சிறிமாவின் ஆட்சிக்காலத்தில் தமிழ் இளைஞர்கள் வெளிநாடு செல்லத்தடை, தடுப்புக்காவலில் இளைஞர்கள்...... என்பதையெல்லாம் மறந்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவருக்கு ஆதரவுதேடமுனைவது கவலைக்குரியது.

"ஐக்கியதேசியக்கட்சி பதவியில் இருந்தகாலத்தில்தான் பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை காங்கேசன் துறைமுக அபிவிருத்தி, சீமெந்து தொழிற்சாலை, மகாதேவா பாலம், தீவுப்பகுதிக்கு பாலம் போன்றவை அமைக்கப்பட்டன. இதனை மக்கள் உணர வேண்டும். சிறிலங்காசுதந்திரக்கட்சி பன்னிரெண்டு வருடம் பதவியில் இருந்தும் மக்களுக்கு பாரிய அபிவிருத்தித் திட்டம் எதையும் நடைமுறைப்படுத்தவில்லை. 1956ம் ஆண்டு பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கையில் சிங்களம் மட்டும்தான் அரசமொழி என்று அறிவித்தன் காரணமாக தமிழர் தனது உரிமையை இழந்தனர்."

திரு. ஆ சின்னத்தம்பி பேசுகையில் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்தன பதவியேற்றபின்பு சென்ற மூன்று ஆண்டுகளாக பொருளாதாரத்துறையில் அதிக முன்னேற்றம் எமது நாடு அடைந்துள்ளது என்றும், இந்நாட்டில் வசிக்கும் எல்லாச் சமூகத்தினரிடையேயும் ஐக்கியமும் ஒருமைப்பாடும் நிலைநாட்டப்பட்டிருக்கின்றது என்றும் கூறினார்.

செயலாளர் திரு. பி. பி. காந்தனும் பேசினார். (கொ-அ)

## "காந்தீயம் அரசியல் கலப்பற்றது"

[சித்தன்கேணி]

"காந்தியத்தின் சரியான கொள்கையை தெரியாத மக்கள் காந்தீயம் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தது என்றும் அரசியல் கட்சி ஒன்றின் மறைமுகமான இயக்கம் என்றும் எண்ணி காந்தியத்தில் சேர்ந்து உழைப்பதற்கு முன்வர மறுக்கின்றனர். இதனால் மக்களிடையே காந்தியத்தின் சரியான கொள்கையைப் பரப்பவேண்டியது எமது முக்கிய கடமையாகும்"

இவ்வாறு காந்தீயத்தின் தலைவரும் - சட்டிடக்கலைஞருமாகிய திரு. டேவிட் கூறினார்.

காந்தீய வட்டுக்கோட்டைக் கிளையின் பொதுக்கூட்டம் சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் கிளைத் தலைவர் திரு. க ஸ்ரீபஞ்சநாதன் தலைமையில் நடைபெற்றபோது திரு. டேவிட் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

காந்திஅடிகள் அகிம்சை, சத்தியம் என்ற மார்க்கத்தில் சென்று தனது பகைவர்களை வென்றவர். காந்தீயம் என்பது சொல்லளவிலும் எழுத்தளவிலும் இல்லாமல் முழுக்க முழுக்க ஆக்கபூர்வமான பணிகளை உருவாக்கும் இயக்கம் சுயபூர்த்தி சுயமரியாதை சுதந்திரம் என்ற மூன்று கருத்துக்களையும் மனதில கொண்டு ஆக்கபூர்வமான பணிகளை செய்வதுதன் காந்தியத்தின் கடமையாகும்.

மக்களுடைய வாழ்க்கையில் சுயமரியாதை சுயபூர்த்தி சுதந்திரம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதும் காந்தீயத்தின் கடமையாகும். (கு)

## 22 கிளைகளிலும் மகளிர் குழுக்கள்

(உடுப்பிட்டி)

கட்டை வேலி நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இருபத்திரண்டு கிளைகளிலும் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் மகளிர் குழுக்களை சங்கத் தலைவர் திரு.த சிதம்பரப்பிள்ளை ஆரம்பித்துவைத்துள்ளார்.

இப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் மாதர் முன்னேற்றம், கிராம அபிவிருத்தி ஆகியவற்றில் மாதர்களை ஈடுபடுத்தும் முகமாகவே பிரஸ்தாப மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (கு)

## தொலைபேசி சேவையில் பாகுபாடா?

(வவுனதீவு)

மட்டக்களப்பு பிராந்திய தொலைபேசி திணைக்களம் படுவான்கரையிலுள்ள ஒரேஒரு பிரசவ விடுதியான நாவற்காட்டுக்கு சூறாவளியின் பின்பு தொலைபேசிச் சேவையை ஏற்படுத்துவதில் பாராமுகமாக இருந்து வருகின்றதா என அப் பகுதி பொதுமக்கள் கேட்கத் தொடங்கியுள்ளார்கள். இத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும்,பிராந்திய அபிவிருத்தி இந்து சமய-கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சருமாகிய திரு. செல்லையா இராசதுரையிடம்நேரில் பல மகஜர் மூலம் பொதுசன ஸ்தாபனங்கள் வலியுறுத்தியுள்ளன ஆயினும் மேற்படி விவகாரத்தில் அமைச்சர் கவனம் செலுத்வில்லையா அல்லது திணைக்களமே மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கின்றதா என்றும்வினவுகின்றனர்.

## 'அவசரகாலம்' நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் நடாத்தவிருக்கும் மனித உரிமைகள் தினமும் 'அவசரகாலம் 79' நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகவிரிவுரையாளர் சீலன் கதிர்காமர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்தில் திருவாளர்கள் போல் ஸ்பர்ஸ் றெஜி ஸ்ரீ வர்த்தனஆகியோர்உட்படமற்றும் பலர் உரையாற்றுவார்கள். (கொ-அ)

## சுகாதாரசேவை அத்தியட்சகர் ஓய்வு பெறுகிறார்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர்டாக்டர் ஆர் அருள்பிரகாசம் தமது பதவியிலிருந்து எதிர்வரும்ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஓய்வு பெறுகின்றார்.

யாழ் அரசினர் வைத்தியசாலைவைத்தியசுப்பிரிண்டனாகவும்பதுளைசுக தாரசேவை அத்தியட்சகராகவும் தமதுப விககாலத்தில்கடமையாற்றியுள்ள டாக்டர் அருட்பிரகாசத்தின் சேவை நலம் பாராட்டுவிழா வொன்றை சிறப்பாக நடாத்துவதற்குசுகாதாரத்திணைக்கள ஊழியர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும்திட்டமிட்டுள்ளனர்.


வெள்ளை அல்லது மண்நிற ஹைசெக்ஸ் நீங்கள் துணிந்து முதலீடு செய்யலாம்.





பலவருடகால ஆராய்ச்சியின் பயனாக வெள்ளை அல்லது மண்நிற ஹைசெக்ஸ் சிறந்த முட்டையிடும் கோழிகளெனப் பெயர் பெற்றுள்ளன. அவற்றை நம்பி உங்கள் வருமானத்தை முன்கூட்டியே கணக்கிட்டு வைக்கலாம். உங்கள் இலாபத்தை உறுதிப்படுத்த நீங்கள் துணிந்து முதலீடு செய்யலாம்.

தேவையான ஒருநாள் கோழிக்குஞ்சுகளுக்கு இப்பொழுதே பதிவு செய்யலாம். ஆகவே, தாமதியாது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

hisex

ஒரு கோழிக்குஞ்சு - ரூ. 6/75
மறெக்ஸ் மருந்து கொடுக்க குஞ்சு ஒன்றிற்கு 35 சதம்

பைரஹா ஃபார்ம்ஸ்
கட்டான. தொலைபேசி - 031 - 2506
உரிமையாளர்கள்: எம். ஐ. எம். நலீம் ஹாஜ்ஜியார் அன்ட் கொம்பனி லிமிடெட்

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-00, 6-00 & 9-30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

ராணி - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
ஒரு தலை காதல்
(குடும்பப் பெண்ணின் கதை)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வெற்றிகரமான 2-வது மாதம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)


LAST FEW DAYS ONLY
SANTHI (JAFFNA) DAILY 4 SHOWS
10-30, 2-30, 6-30, 9-30
★ LEE MARVIN. ★ CHARLS BROWNSON
★ JIM BROWN
"THE DIRTY DOZEN"

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்
19-ம் திகதி முதல்
நினைத்தாலே இனிக்கும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
எம்.ஜி.ஆர். - சாவித்திரி
வேட்டைக்காரன்

ராஜா தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
(யாழ்.நகர்)
இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'
என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
யாழ்ப்பாணம்



செவன் ஆர்ட்ஸ் அளிக்கும்
ஒருதலை காதல்
ஒரு குடும்பப் பெண்ணின் உணர்ச்சிப் போராட்டம்

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 2ம் திகதி
புதன்கிழமை
(17-12-80)

மேடம்: பேச்சு வார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசர முடிவின் மூலம் விரோதத்தைத் தேடிக்கொள்வீர்கள். துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச்செயலில் ஈடுபடுவார்கள்.

இடபம்: துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர்விடுவதற்கு இடமுண்டு. இனிமையான பேச்சின்மூலம் எல்லோரையும் கவர்ந்துகொள்வீர்கள். அவசர அழைப்பிதழ் உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம்.

மிதுனம்: சகோதரவழியால் சஞ்சலம் தோன்ற கூடும். உள்வீட்டிலேயே பூசல் தலைதூக்கும். உஷாராக இரு.

கடகம்: சகல துறைகளிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக ஆதாயமுண்டு. மாணவர்களாயின் கல்வியில் முன்னேற்றம் தென்படும். சிலருக்கு ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கலாம்.

சிங்கம்: மக்களால் மகிழ்ச்சி, மனம் நிறைந்த வாழ்வு. புதுமையில் நாட்டம் புதுப் பொலிவுமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

கன்னி: விவசாயத்துறை கவலையைத் தரும். மனதில் உற்சாகம் குன்றும். கால்நடைகள் விடயத்தில் கவனமாக இருக்கவும். சகல தொழிலாளர்களின் தொல்லைகள் தோன்றி மறையும்.

துலாம்: குடும்பத்தில் மகிழ்ச்சி. செலவினங்கள் கட்டுபடியாகவே இருக்கும்.

விருட்சிகம்: செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சந்திசெய்வதற்குச் சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர்.

தனு: மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. தெய்வ நம்பிக்கையில் ஆர்வம் பிறக்கும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

மகரம்: வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளக்க்கும் சுபதினம்.

கும்பம்: வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம்போல் மணம் பரப்பிக்கொண்டிருக்கும். காதல் சிட்டுகளுக்கு இன்று கவர்ச்சிகரமானதினம். பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும்.

மீனம்; எதிர்பாராத செலவினங்களினால் பாதிக்கப்படுவீர்கள் கடன்வாங்கவும் நேரிடலாம். சமீபத்தில் நடைபெற்று முடிந்த சம்பவமொன்று மனதுக்கு வேதனையைத் தரலாம். தொழிலிலும் தொல்லையுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்"

(யாழ்ப்பாணம்)

"இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்கள் அவர்களை நல்ல வழியில் உருவாக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். தமது கடமையை உணர்ந்து செயல்படுவார்களேயானால் சிறுவர்களை ஆரம்பத்திலேயே நற்பழக்க வழக்கங்களைப் பயில முடியும்.

பாஷையூரில் நடைபெற்ற சிறுவர் எழுச்சி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

புனித திரேசா பாடசாலையின் சிறுவர் எழுச்சி விழா பாஷையூர் புனித அந்தோனியார் மன்றத்தில் ஆசிரியர் செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. விஸ்வநாதன் தொடர்ந்து பேசுகையில் சிறுவர்களுக்கு ஆரம்பக்கல்வி கற்பிக்கும்போது சுகாதாரத்தையும் சேர்த்துப் போதிக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் எதிர்காலத்தில் திடகாத்திரமானவர்களாகவும் நாட்டையும் வீட்டையும் சுத்தமாக வைத்திருக்கவும் பழகிக்கொள்ள முடியும் என்றார்.

ஆசிரியர் செபஸ்தியாம்பிள்ளை தமது தலைமையுரையில் புனித திரேசா பாடசாலையின் வளர்ச்சி பற்றியும், அதன் முன்னேற்றத்திற்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியரின் பணிபற்றியும் கூறினார்.

பாசையூர் மாநகரசபை உறுப்பினர் திரு. கப்ரியல் உரையாற்றுகையில் கூறியதாவது:- சிறுவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு ஆரம்பக் கல்விதான் அத்திபாரமாக அமைகிறது. அதை சிறுவர்களின் தாய் தந்தையர் நன்குணர்ந்து செயலாற்றவேண்டும்.

வெளிநாடுகளில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தான் அதிக சம்பளமும், வசதிகளும் அளிக்கப்படுகிறது. அந்த நிலை இங்கு இல்லை.

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் சிறுவர்களை மிகவும் மதித்து நடாத்தினார். சிறுவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு முன்பாகச் செல்லும்போது மட்டுமல்ல, சிறுவர்கள் கூடும் இடங்களிலும்கூட அமரர் வின்சன்ட் சேர்ச்சில் தமது தொப்பியைக் கழற்றி மரியாதை செலுத்திவிட்டுச் செல்லுவார். (கொ-இ)

## நீர் தேங்குவதை தடுக்க நடவடிக்கை

(உடுப்பிட்டி)

கன்பொல்லை மாதிரிக் கிராமத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடும்மழை பெய்யும் காலங்களில் இம்மாதிரிக் கிராமத்தில் தேங்கும் வெள்ளத்தை அப்புறப்படுத்துவதற்கென பாரிய குழி ஒன்று வெட்டப் பட்டுள்ளது. (கு)

## நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கு பனை பாவனையாளர் சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் எஸ். ஆர். ஞானசுந்தரம், உபதலைவர்: கு. நடேசபிள்ளை, செயலாளர்: ச. ம. தவராசா, உபசெயலாளர்: சி. பரமேஸ்வரன், பொருளாளர்: பொ. அருணாசலம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக 11 பேர் தெரிவாகினர். (கு)

ஃ ஃ ஃ

வலி. வடக்கு தெற்கு கயரோகத் தடுப்பு சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவானார்கள்.

தலைவர்: திரு. செ சோதிப்பெருமாள் உபதலைவர்கள்: திரு. இரா. சண்முகரத்தினம் திரு சிவயோகராசா, திரு. முத்துலிங்கம். செயலாளர்: திரு. ச. ம. தவராசா உபசெயலாளர்: திரு பி. ஆர். நடராசன் தனாதிகாரி; திரு செ. இலகுநாதன் அமைப்பாளர்கள்: திரு. நா. போஜன். திரு. த. நடராசா, - எட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ ஃ

(மாவிட்டபுரம்)

ஏழாலை சைவசமயஅபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் ஏழாலை ஐக்கிய நாணய சங்க மண்டபத்தில் நடந்தபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்

போஷகர்கள் திரு. மு. ஞானப்பிரகாசம், பண்டிதர் மு. கந்தையா, திரு. மு. கந்தப்பசேகரம்பிள்ளை, திரு. செ. சின்னத்துரை, திரு. நா. இரத்தினம். தலைவர்:- திரு. சி. சக்கிகிரீவன் உபதலைவர்:- திரு. சி முத்துக்குமாரசாமி பொதுச் செயலாளர்:- திரு. ஆ. வேலாயுதம் நிர்வாகச் செயலாளர் திரு. கு. விக்னேஸ்வரன் பொருளாளர்:- திரு. மு. சமுணநிதி உபபொருளாளர் திரு, வ. கணபதிப்பிள்ளை, திரு. சிவ. சண்முகவடிவேல்.

ஃ ஃ ஃ ஃ

(சுழிபுரம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் புதிய நிர்வாகிகள்.

தலைவர்:- வே. மு. சண்முகம், துணைத்தலைவர்கள்:- இ. வே. கார்த்திகேசு, டாக்டர். வே. கனகசுந்தரம், மு. இரத்தினசிங்கம், ச. சபாபதி பொருளாளர்:- வே. மு. சபாரத்தினம், துணைப் பொருளாளர்:- க நாகேந்திரம், செயலாளர்:- பண்டிதர் மு சு. வேலயுதபிள்ளை, துணைச் செயலாளர்: ந. நகுலநாதன் உறுப்பினர்களாக 17 பேர் தெரிவாகினர். (கு)

## 'வங்கிக்கிளை வேண்டும்'

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் இலங்கை வங்கிக் கிளை ஒன்றை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் இலங்கை வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளரை கடிதமூலம் கேட்டுள்ளது இக்கடிதத்தின் பிரதி வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி.க்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

17ந்- திகதிவரை
நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
ஞானக்குழந்தை

வெலிங்டன்
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி-சாரதா
ஞானஒளி

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
சாரதா

வின்ஸர் (யாழ்நகர்) LAST FEW DAYS
Daily at 10-30 A.M., 2-30, 4-30, 7-00 & 9-30 P.M.only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
FEAR IS THE KEY
Scope-Color Thrill & Action

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் கிடைக்கும்
எண்சோதிட மறுமலர்ச்சி
இலங்கை சோதிட ஆய்வுமன்ற வெளியீடு - 1
ஆசிரியர்: Lr. பண்டிற் K N. நவரத்தினம் A. F. A.
விலை ரூபா 3-00
வியாபாரிகளுக்கு ஏற்ற கழிவுண்டு.
(1) K. N. நவரத்தினம் 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(2) திருக்கணித நிலையம் சாவகச்சேரி.
(3) பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். - 7645


ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்) பொலிஸ்சார்ஜன்ட் அன்ரன் கொலைவழக்கு நேற்றுக்காலை யாழ்.நீதவான் திரு.ரி.ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இம் மாதம் 22ம்திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

பிரார்த்தனை நூல்கள்
பிள்ளையார் கதை - 3 00
பிள்ளையார் புராணம் உரையுடன் - 2.50
விநாயகர் தோத்திர மாலை - 2.50
விநாயகர் அகவலும் கவசமும் - -50
மார்கழிப் பாராயணம் - 2.00
காந்தளகம்
13, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


# நன்றி நவிலலும்
## அந்தியேட்டி அழைப்பும்



அமரர் ஸ்ரீமான்
க. ஆ. பொன்னுத்துரை
(குடக்கர்)

அமரர் ஸ்ரீமான் க. ஆ. பொன்னுத்துரை அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் சாத்தியும், அன்னாரை கௌரவித்து எமது துயரங்களில் பங்கு கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் 17 - 12 - 1980 புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

550/8, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 7659




செவன் ஆர்ட்ஸ் அளிக்கும் ''ஒருதலைகாதல்'' திரையிடப்பட்டதனை தன்று நடைபெற்ற பூஜையின் பின் திரைப்படச்சுருளை யாழ். நகரமுதல்வா, ராணித்தியேட்டர் பொதுமுகாமையாளரிடம் கையளிக்கும் போது எடுக்கப்பட்ட படம் படத்தில் இடமிருந்து வலமாக திரு வி. என். நவரத்தினம் எம். பி, முகாமையாளர் சிதம்பரநாதன், தயாரிப்பு மேற்பார்வையாளரான கலைஞர் கலைச்செல்வன், மேயர் விஸ்வநாதன், திரு. குலம், நடிகர் யாழூர் அரிநாஸ் ஆகியோர காணப்படுகின்றனர்.

# லக்டோஜன் விநியோகம் 25 வீதம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாவனையாளர்களுக்கு லக்டோஜன பாலுணவு கிரமமாகக்கிடைப்பதற்கு வசதியாக இம்மாதம 12,048 ருத்தல் லக்டோஜன் வழங்கப்படவுள்ளது. யாழ். மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் கடந்த செப்டம்பர்முதல் அமுல்படுத்திய புதிய திட்டம் வெற்றியளித்ததைத் தொடர்ந்து கடந்த நான்கு மாதங்களில் இத்தொகை இருபத்தைந்து சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இம்மாதம் பண்டிகைக்காலமாக இருப்பதால் எதிர்வரும் 23-ம் திகதியே பாவனையாளர்களுக்கு யாழ் மாவட்டத்திலுள்ள 22 அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகநிலையங்களில் லக்டோஜன் பாலுணவு வழங்கப்படும்.

ஒவ்வொரு பாவனையாளர்களும் தங்கள் குடும்ப அட்டையையும், குழந்தையின் பிறப்புச் சான்றிதழையும் காண்பித்து 3 ருத்தல் லக்டோஜன் பாலுணவைப் பெற்றுக் கொள்ளுமாறு விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

புதிய திட்டம் அமுல்படுத்தப்பட்டபின்னர்- அங்கீகரிக்கப்படாத வர்த்தக நிலையங்கள் இரண்டில் லக்டோஜன் பாலுணவு வைத்திருந்ததாக விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவினர் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

## கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முத்து—விஞ்ஞான முதுமானி (Msc). முன்னாள் நுட்ப ஆராய்ச்சியாளர் திரு. ஜே. சி. பெர்னாண்டோ விஞ்ஞான முதுமானி முன்னாள் நுட்ப ஆராய்ச்சியாளர் திரு. பி ஏ. எஸ். பெரேரா — விஞ்ஞான முதுமானி.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு ஆகஸ்ட், செப்டம்பரில் நடைபெற்ற பரீட்சைகளில் சித்தியெற்ற சுமார் 500 மாணவர்களுக்கும் இவ்விழாவில் பட்டம் வழங்கப்படும். (ஏ)

## தமிழ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''அண்மையில் இடம்பெற்ற வேலைநிறுத்த காலத்தில், கோட்டை புகையிரத நிலைய அத்தியட்சகர் திரு. சமரசிங்காவும் திறமையாகச் சேவையாற்றியதை நான் இங்கு பாராட்டுகின்றேன். பிரயாணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் திரு. சமரசிங்கா பணியாற்றியதை பொது மக்களும் பாராட்டினர் அதிகாரிகள் தவறுவிடும் பட்சத்தில் அவற்றை இங்கு சுட்டிக் காட்டும் நாம், அவர்கள் நல்ல சேவையாற்றும் போது அவர்களைப் பாராட்டவும் கடமைப்பட்டுள்ளோம்'' என்று கூறினர். (ம)

## 2500...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சியின்போது கண்டுபிடிக்கப்பட்ட புராதன பொருட்களில் இதுவும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது

இவ்ஆய்வுகளைப் பற்றிய முதலாவது கருத்தரங்கு நாளை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தன்காசிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக,வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கா இந்திரபாலா உரையாற்றுவார்.


சிவாச்சிரமம், காரைநகர்

திருவெம்பாவை தினத்தை முன்னிட்டு 17-12-1980 புதன்கிழமை முதல் தினமும் அன்னதானம் நடைபெறும்.

இங்ஙனம்
7660 சிவாச்சிரம அடியார்கள்



நத்தார் - புதுவருடப் பண்டிகைகளை
முன்னிட்டு
# விசேட மலிவு விற்பனை

| | பழைய விலை ரூபா | மலிவு விலை ரூபா |
|---|---|---|
| பான்சி வெயர் (Pancy wear) | 140-00 | 115-00 |
| ஸ்கேட் (Printed Skirt) | 95-00 | 60-00 |
| லேடிஸ் பெல்ஸ் (Ladies Bells) | 120-00 | 100-00 |

[மேற்படி விலைகள் 20-12-1980 வரை மட்டுமே!]

★ உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்

# லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்,

18, மின்சார நிலைய விதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
சா பசி: 684



# மரண அறிவித்தல்
## திருமதி லில்லி யோசவ்பின்

கரம்பொனைச் சேர்ந்த லில்லி யோசவ்பின் அவர்கள் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற F. M. சிங்கநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், பிரான்சிஸ்கா, இராணி, ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி அதிபர் இரட்ணராசா, ஆனந்தராஜா, ஸ்ரீ ராஜ் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற P. S இம்மானுவேலின் அன்புச் சகோதரியும் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் P. S வீரசூரிய, யாழ். பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் B. லோறன்ஸ், புவனேஸ்வரி, பற்றீசியா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். இவரின் பூதவுடல் இன்று 17-12-1980 பிற்பகல் 3-00 மணியளவில் யாழ்ப்பாணம் சப்பல் வீதி 128ம் இலக்க இல்லத்திலிருந்து கரம்பொன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

128, சப்பல்வீதி, யாழ்ப்பாணம்.
7653


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... மையத்தில் 3-ம் ஒழுங்கை அச்சகத்தில் டிசம்பர் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General PostOffice Sri Lanka. under No: GB 8948/78. TheEelanaadu P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 3 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org